**<u>கொரிய குடியரசுக்கு விஜயம் செய்யவுள்ள சனாதிபதி மைத்திரிபால சிறிசேன</u>**

இலங்கை மற்றும் கொரிய குடியரசுக்கிடையிலான இராசதந்திர உறவுகள் நிறுவப்பட்டு 40ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, சனாதிபதி முன் ஜே-இன் அவர்களின் அழைப்பின் பேரில், இலங்கையின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2017 நவம்பர் 28 - 30 ஆந் திகதி வரை கொரிய குடியரசுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நவம்பர் 29 ஆந் திகதியன்று சனாதிபதி முன் அவர்கள், உச்சி மாநாட்டு கலந்துரையாடல்களுக்காக சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களை சந்திக்கவுள்ளதுடன், இலங்கை சனாதிபதிக்கான இராப்போசனை விருந்தையும் ஒழுங்கு செய்துள்ளார். இரு நாட்டுத் தலைவர்களும் இலங்கை மற்றும் கொரிய குடியரசு ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பரஸ்பர நலன்கள் தொடர்பான விடயங்களை கலந்துரையாடவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது பொருளாதார ஒத்துழைப்பு, பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு குறித்த உடன்படிக்கைகளிலும் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பு மற்றும் வேலைவாய்ப்பு அனுமதி முறைமை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் இருநாட்டு அரசாங்கங்களும் கைச்சாத்திடவுள்ளன.

மேலும் நான்கு மிகப்பெரிய கொரிய வர்த்தக அமைப்புக்களினால் இணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வர்த்தக மதிய விருந்துபசாரத்தில் சனாதிபதி அவர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன், கொரியக் குடியரசில் வசிக்கும் இலங்கையர்களை சந்திக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

கொழும்பு

2017 நவம்பர் 22